WEB COPY

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

**DATED: 16-02-2026**

CORAM

**THE HON'BLE MR.JUSTICE V. LAKSHMINARAYANAN**

**CONT P No. 61 of 2026**

Smart City Dhinasari Poo Market
Vyabarigal Sangam(Registration No.117/2024)
Represented by its President Mr.Sulaiman
S/o.Gulmuhamadhu, Eswaran Kovil Street,
Tiruppur-641 604.

..Petitioner(s)

Vs

M.P.Amith
The Commissioner
Tiruppur City Municipal Corporation,
Tiruppur.

..Contemnor(s)

**Prayer:** This petition filed under Section 11 of the Contempt of Court Act, 1971, to initiate contempt proceedings against the respondent / 3rd respondent and punish him for his willful disobedience of this Court in W.P. No. 8521 of 2025 dated 07.07.2025.

For Petitioner(s): Mr. Navas Shareef.M
For Contemnor(s): Mr. M.Suresh Kumar, AAG
Assisted by Mr.Abishek Moorthy

**O R D E R**

Alleging the violation of the order passed by this Court in W.P. No. 8521 of 2025 dated 07.07.2025, the writ petitioner has initiated this contempt.

2.By an order dated 07.07.2025, this Court passed the following order:-

*“7. It is made clear that the respondents 3 & 4 shall not insist for any enhanced rent from the petitioner, till the disposal of his representation dated 20.02.2025 by the third respondent.”*



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

3. I heard Mr.M.Navas Shareef for the petitioner and Mr.M.Suresh Kumar for Mr.Abishek Moorthy for the respondent.

4. Mr.M.Suresh Kumar brings to the notice of this Court an order dated 25.04.2025 passed by the Assistant Commissioner, Tiruppur Corporation. In terms of that order, the representation that had been made on 22.02.2025, which was the subject matter of the writ petition, had been disposed of by the Commissionerate. It had been duly communicated to the petitioner on 09.05.2025. This shows that even before the order was passed by this Court on 07.07.2025, the representation was not pending. The counsel, who appeared for the Corporation on that day, had not brought this aspect to the notice of this Court. Perhaps, it was an account of the order having been passed when the writ petition came up for admission.

5. Apart from this, in compliance with the orders, the Commissioner had issued summons to the contempt petitioner on 30.01.2026, calling upon him to make his representations with relevant records, for enquiry at 11.00 a.m. on 31.01.2026. On 31.01.2026, the Commissioner has rejected the representation.

6. The order dated 25.04.2025, summons dated 30.01.2026, and the order dated 31.01.2026 are scanned and extracted hereunder:-

"



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

அனுப்புனர்:
திரு.S.கணேஷ் குமார்,
உதவி ஆணையர் (வ),
மாநகராட்சி அலுவலகம்,
திருப்பூர்.

பெறுநர்
சுலைமான் S/o குல் முஹம்மது,
11/2, செம்மேடு தோட்டம் ,
வேலன் ஹோட்டல் பின்புறம்,
ரேணு நகர் 1 வது வீதி,
திருப்பூர்.

---

**ந.க.எண் : 1022/2025/அ1 நாள் : .04.2025**

பொருள் : குத்தகை – திருப்பூர் மாநகராட்சி – ஈஸ்வரன் கோவில் வீதி பூமார்க்கெட் – வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. சுலைமான் S/o குல் முஹம்மது. 11/2, செம்மேடு தோட்டம் , வேலன் ஹோட்டல் பின்புறம், ரேணு நகர் 1 வது வீதி, திருப்பூர். விண்ணப்பம் நாள்: 22.02.2025
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனு எண்– 11178343, நாள் : 05.03.2025
3. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ஒ.மு எண்–4153/2025/23, நாள்– 06.03.2025

-------

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3 க்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதி பூமார்க்கெட் ஸ்மார்ட் சிட்டி விரிவாக்கப்பணிகள் மூலம் பழைய பூமார்க்கெட் இடிக்கப்பட்டு அதே நிலையில் புதிய பூமார்க்கெட் ஸ்மார்ட் திட்டத்தின் கீழ் மிடுக்கான புதிய பூமார்க்கெட் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டது.

மேற்காணும் ஈஸ்வரன் கோவில் வீதி பூமார்க்கெட் பொது ஏலம் விட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 181ஆம் எண்ணிட்ட 19.09.2008 ஆம் தேதிய அரசாணையின் வழிகாட்டுதலின்படி 2023 – 2026 வரையுள்ள மூன்று ஆண்டுகளுக்கு 19.09.2023 ஆம் தேதிய 7836/2022/அ1 எண்ணிட்ட செயல்முறைகளின் படி 19.09.2023 முதல் குத்தகைதாரர் திருமதி எஸ்.சரண்யா த/பெ.சண்முகம் திருப்பூர் என்பவருக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டு நாளது தேதி வரை பூமார்க்கெட் கடைகள் செயல்பட்டுவருகிறது.

மேற்படி அரசாணையின் கீழ் ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் ஒப்படைக்கப்படும் குத்தகை தொகையில் இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் இரண்டாம் ஆண்டின் தொகையில் இருந்து 5% குத்தகை உயர்வு செய்யலாம் என்ற அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது.

திருமதி சரண்யா குத்தகைதாரர் 2023 – 2026 வரையுள்ள மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்யப்பட்டதில் தற்போது இரண்டு ஆண்டுகள் முடிவு பெற்று,


https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



கடைசி மூன்றாம் ஆண்டு 2025 – 2026 ஆம் ஆண்டுக்கு குத்தகை நடத்தி கொண்டு வருகிறார். இவரது குத்தகை காலம் 31.03.2026 உடன் முடிவடைகிறது. தற்போதைய ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.2,76,72,885/– ஆகும்.

பூமார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கடைகள் குத்தகைதாரர்க்கு ஆண்டு குத்தகையாக மொத்தமாக மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது, வசூலித்தல் குத்தகைதாரரை சார்ந்ததாகும். அதில் வரும் லாபம் மற்றும் நஷ்டத்திற்கு அவரே முழுப்பொறுப்பானவர் ஆவர். மாநகராட்சியால் பொது வுல நிபந்தனைகளின்படி பொறுப்பேற்க்க இயலாது.

மேலும் கடைகளின் வாடகைதாரர்களின் வாடகையை ஏற்றுக்கொள்வது மறுப்பது குத்தகைதாரரை சார்ந்ததாகும் குத்தகை தாரரே முழுப்பொறுப்பாவர் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

உதவி ஆணையாளர் (வ),
திருப்பூர் மாநகராட்சி.
25/4/25

நகல் : சி4 – எழுத்தர்.

தபால் அனுப்பட்டது
நாள் 9.5.25.
அனுப்புவாக எழுத்தர்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

அனுப்புநர்

திரு.M.P.அமித்,இ.ஆ.ப.,
ஆணையாளர்,
மாநகராட்சி அலுவலகம்,
திருப்பூர்.

பெறுநர்

1. திரு.கு.சுலைமான்,
தலைவர், திருப்பூர் ஈஸ்வரன் கோவில் வீதி ஸ்மார்ட் சிட்டி தினசரி பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கம்,
ஈஸ்வரன் கோவில் வீதி,
திருப்பூர் 641604.

2. திருமதி.S.சரண்யா,
க/பெ.சண்முகம்,
1/264 திருமலை நகர்,
நெருப்பெரிச்சல்,
திருப்பூர் 641602
செல்-9943343319.

---

ந.க.எண்.5605/2025/அ1 நாள். .01.2026

பொருள் : குத்தகை – திருப்பூர் மாநகராட்சி – ஈஸ்வரன் கோவில் வீதி தினசரி பூ மார்க்கெட் கடைகள் – வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக அளிக்கப்பட்ட கடிதம் – மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி விசாரணைக்கு நேரில் ஆஜராக கோருதல் – தொடர்பாக.

பார்வை : 1. திரு.கு.சுலைமான், தலைவர், திருப்பூர் ஈஸ்வரன் கோவில் வீதி ஸ்மார்ட் சிட்டி தினசரி பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கம் மனு நாள்.20.02.2025.
2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை வழக்கு எண்.8521/2025 மற்றும் W.M.P.No.9544/2025இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்.07.07.2025

------

திருப்பூர் மாநகராட்சியில் மண்டலம் எண்-3க்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதி தினசரி பூ மார்க்கெட் கடைகள் குத்தகைக்கு விடப்பட்டதில், கடை வாடகை நிர்ணயம் செய்யக்கோரியது தொடர்பாக பார்வை-1இல் காணும் மனு தங்களால் அளிக்கப்பட்டது.

பார்வை-2இல் காணும் உத்தரவின் வரிசை எண்.6இல் கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

6. Considering the limited relief sought for by the learned counsel for the petitioner, this Court without going into the merits of the case directs the third respondent to consider the petitioner's representation dated 20.02.2025, after giving due notice to the petitioner as well as the third respondent, affording an opportunity of personal hearing and considering the documents filed by both the parties and pass appropriate orders on merits and in accordance with law, within a period of eight weeks from the date of receipt of a copy of this order.

* * * * * * * *

எனவே, மேற்படி உத்தரவின் பேரில், இது தொடர்பான நேரடி விசாரணைக்கு 31.01.2026 அன்று திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களது முன்பு காலை 11.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் ஆஜராகுமாறு இத்துடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

அனுப்புநர்

திரு.M.P.அமித்,இ.ஆ.ப.,
ஆணையாளர்,
மாநகராட்சி அலுவலகம்,
திருப்பூர்.

பெறுநர்

திரு.கு.சுலைமான்,
தலைவர், திருப்பூர் ஈஸ்வரன் கோவில்
வீதி ஸ்மார்ட் சிட்டி தினசரி பூ
மார்க்கெட் வியாபாரிகள் சங்கம்,
ஈஸ்வரன் கோவில் வீதி,
திருப்பூர் 641604.

ந.க.எண்.5805/2025/அ1 நாள்.31.01.2026

பொருள் : குத்தகை – திருப்பூர் மாநகராட்சி – ஈஸ்வரன் கோவில் வீதி தினசரி பூ மார்க்கெட் கடைகள் – வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பான 20.02.2025ஆம் தேதிய மனு – மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி 31.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொண்டது – மனுவின் மீதான இறுதி உத்தரவு பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.கு.சுலைமான், தலைவர், திருப்பூர் ஈஸ்வரன் கோவில் வீதி ஸ்மார்ட் சிட்டி தினசரி பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கம் மனு நாள்.20.02.2025.
2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வழக்கு எண்.8521/2025 மற்றும் W.M.P.No.9544/2025இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்.07.07.2025.
3. உயர்நீதிமன்ற உத்தரவின் படி நேரடி விசாரணைக்கான அழைப்பு கடிதம் ந.க.எண்.5805/2025/அ1 நாள்.30.01.2026
4. ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களால் நடத்தப்பட்ட நேரடி விசாரணை நாள்.31.01.2026.
5. திரு.கு.சுலைமான், த/பெ.குல்முகமது, திருப்பூர் என்பவரது மனு நாள். 22.02.2025.
6. திரு.கு.சுலைமான், த/பெ.குல்முகமது, திருப்பூர் என்பவருக்கு முகவரியிட்ட இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1022/2025/அ1 நாள். 25.04.2025.

-----

திருப்பூர் மாநகராட்சியின் மண்டலம் எண்-3க்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதி தினசரி பூ மார்க்கெட் கடைகளுக்கு பொதுப்பணித்துறை நிர்ணயிக்கும் வாடகை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்தபின்னர் அதனடிப்படையில்



https://www.mhc.tn.gov.in/judis

குத்தகைதாரர் வசூலிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பார்வை-1இல் காணும் மனு மீது நடவடிக்கை எடுக்ககோரி மனுதாரர் திரு.கு.கலைமாமன், தலைவர், திருப்பூர் ஈஸ்வரன் கோவில் வீதி ஸ்மார்ட் சிட்டி தினசரி பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கம் அவர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனுவின் மீது பார்வை-2இல் காணும் உத்தரவில், ஏனையவற்றுடன், கீழ்கண்டுள்ளவாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

"......."

6. Considering the limited relief sought for by the learned counsel for the petitioner, this Court without going into the merits of the case directs the third respondent to consider the petitioner's representation dated 20.02.2025, after giving due notice to the petitioner as well as the third respondent, affording an opportunity of personal hearing and considering the documents filed by both the parties and pass appropriate orders on merits and in accordance with law, within a period of eight weeks from the date of receipt of a copy of this order.

"......."

அதன் அடிப்படையில் பார்வை-3இல் காணும் அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டு 31.01.2026 அன்று முற்பகல் ஆணையாளர் அவர்களால் பார்வை-4இல் காணும் நேரடி விசாரணை நடத்தப்பட்டது. மேற்படி விசாரணையில் இவ்வழக்கின் மனுதாரர் திரு.கு.கலைமாமன், தலைவர், திருப்பூர் ஈஸ்வரன் கோவில் வீதி ஸ்மார்ட் சிட்டி தினசரி பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கம், இவ்வழக்கின் நான்காம் எதிர்மனுதாரர் திருமதி.S.சரண்யா, க/பெ.சண்முகம் மற்றும் மூவர் கலந்துகொண்டு, பூ மார்க்கெட் கடைகளுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் குத்தகைதாரர் வாடகை வசூலிக்க வேண்டும் என தெரிவித்தனர்.

திரு.கலைமாமன், த/பெ.குல்முஹம்மது, 11/2, செம்மேடு தோட்டம், வேலன் ஹோட்டல் பின்புறம், ரேணு நகர் 1 வது வீதி, திருப்பூர் (இவ்வழக்கின் மனுதாரர்) அவர்கள் இதே கோரிக்கைகளுக்காக பார்வை-5இல் காணும் மனுவை ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களுக்கு அளித்ததை அடுத்து பார்வை-6இல் உள்ளபடி இவ்வலுவலக கடிதத்தில் கீழ்கண்டுள்ளவாறு மனுதாரருக்கு பதில் அனுப்பப்பட்டது.

'திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3 க்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதி பூமார்க்கெட் ஸ்மார்ட் சிட்டி விரிவாக்கப்பணிகள் மூலம் பழைய பூமார்க்கெட் இடிக்கப்பட்டு அதே நிலையில் புதிய பூமார்க்கெட் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மிடுக்கான புதிய பூமார்க்கெட் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டது.


https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

மேற்காணும் ஈஸ்வரன் கோவில் வீதி பூமார்க்கெட் பொது ஏலம் விட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 181ஆம் எண்ணிட்ட 19.09.2008 ஆம் தேதிய அரசாணையின் வழிகாட்டுதலின்படி 2023 2026 வரையுள்ள மூன்று ஆண்டுகளுக்கு 19.09.2023 7836/2022/1 எண்ணிட்ட தேதிய ஆம் செயல்முறைகளின் படி 19.09.2023 முதல் குத்தகைதாரர் திருமதி எஸ்.சரண்யா க/பெ சண்முகம் திருப்பூர் என்பவருக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டு நாளது தேதி வரை பூமார்க்கெட் கடைகள் செயல்பட்டுவருகிறது.

மேற்படி அரசாணையின் கீழ் ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் ஒப்படைக்கப்படும் குத்தகை தொகையில் இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் இரண்டாம் ஆண்டின் தொகையில் இருந்து 5% குத்தகை உயர்வு செய்யலாம் என்ற அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது.

திருமதி சரண்யா குத்தகைதாரர் 2023 – 2026 வரையுள்ள மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்படைப்பு செய்யப்பட்டதில் தற்போது இரண்டு ஆண்டுகள் முடிவு பெற்று, கடைசி மூன்றாம் ஆண்டு 2025 – 2026 ஆம் ஆண்டுக்கு குத்தகை நடத்தி கொண்டு வருகிறார். இவரது குத்தகை காலம் 31.03.2026 உடன் முடிவடைகிறது. தற்போதைய ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.2,76,72,885/– ஆகும்.

பூமார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கடைகள் குத்தகைதாரர்க்கு ஆண்டு குத்தகையாக மொத்தமாக மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது, வசூலித்தல் குத்தகைதாரரை சார்ந்ததாகும். அதில் வரும் லாபம் மற்றும் நஷ்டத்திற்கு அவரே முழுப்பொறுப்பானவர் ஆவர். மாநகராட்சியால் பொது ஏல நிபந்தனைகளின்படி பொறுப்பேற்க்க இயலாது.

மேலும் கடைகளின் வாடகைதாரர்களின் வாடகையை ஏற்றுக்கொள்வது மறுப்பது குத்தகைதாரரை சார்ந்ததாகும் குத்தகை தாரரே முழுப்பொறுப்பாவர் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'

விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன. பார்வை–1இல் காணும் மனுவில் உள்ள கோரிக்கை, மேற்படி குத்தகை இனத்தின் மூன்றாண்டு குத்தகை காலமான 2023–24 முதல் 2025–26இன் இரண்டாம் குத்தகை ஆண்டின் முடிவில் எழுப்பப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியின் ஏல நிபந்தனையின்படியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 181ஆம் எண்ணிட்ட 19.09.2008 ஆம் தேதிய அரசாணையின் வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி



https://www.mhc.tn.gov.in/judis

அமைப்புகள் விதிகள்–2023இன் படியும் முந்தைய ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

குத்தகை காலம் மற்றும் குத்தகை தொகை மூன்றாண்டுகள் என்பதால் குத்தகை காலத்தையோ குத்தகை தொகையையோ மாற்றி அமைத்திட விதிகளில் வழிவகையில்லை, என்பதால் மேற்படி மனுவில் உள்ள கோரிக்கை ஏற்க இயலாது. மேலும், அப்பகுதியில் நிலவி வரும் கடைகளுக்கான தேவையின் அடிப்படையில் வாடகை குத்தகைதாரரால் வசூலிக்கப்படுகிறது. அத்தொகை செலுத்த சம்மதிக்கும் வியாபாரிகளுக்கு குத்தகைதாரரால் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மேற்படி விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில், மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே தெரிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி
5/2
3/1/26

நகல் – திருமதி.S.சரண்யா,
க/பெ.சண்முகம்,
1/264 திருமலை நகர்,
நெருப்பெரிச்சல்,
திருப்பூர் 641602
செல்–9943343319.

”

Since this is in compliance with the order passed by this Court, I do not find the necessity to initiate any contempt proceedings against the respondent.

7. Accordingly, this contempt petition stands closed. No costs.

**16-02-2026**
1/2

Index: Yes/No
Speaking/Non-speaking order
Neutral Citation: Yes/No
*Maya*


https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

**V.LAKSHMINARAYANAN, J.**

*Maya*

To

Thiru.M.P.Amith
The Commissioner
Tiruppur City Municipal Corporation,
Tiruppur.

**CONT P No. 61 of 2026**

**Dated : 16-02-2026**



https://www.mhc.tn.gov.in/judis